அங்கையர் கன்னியின் அனல் விழி திறந்தது
அலைகடல் மீதிலோர் அதிசையம் நடந்தது
சிங்களக் குகையினில் கடற்புலி புகுந்தது
திசைகளும் அதிர்ந்திட கரும்புலி சிவந்தது

அங்கையர் கன்னிக்கு ஆயிரம் ஆயிரம் அக்கினி தீபங்கள் ஏற்று
எங்கள் தங்கையின் பேரினில் ஆயிரம் ஆயிரம் செந்தமிழ் பாடல்கள் சாற்று 2
புதிய பரணி எழுது இவள் புயலின் தொடியின் விழுது
உயிரில் கவிதை எழுது இவள் உதைய காலப் பொழுது

அங்கையர் கன்னிக்கு ஆயிரம் ஆயிரம் அக்கினி தீபங்கள் ஏற்று

புயலே புயலே கடலின் மடியினில் உயிரை கரைத்த மகளே
பகைவர் இருந்த குகையில் புகுந்து படகை எரித்த புலியே
தீயினில் மூட்டினாய் கப்பலை ஒரு சிறுதுகள் கூடவே தப்பலை 2

அங்கையர் கன்னிக்கு ஆயிரம் ஆயிரம் அக்கினி தீபங்கள் ஏற்று

கடலில் புலிகள் உலகில் நிமிரும் நிலையை படைத்த மகளே
திசைகள் முழுதும் தமிழர் உயரும் வகையில் எழுந்தபுலியே
அலைகடல் மீதினில் பாடுறாள் இவள் ஆயிரம் காலங்கள் வாழுவாழ் 2

அங்கையர் கன்னிக்கு ஆயிரம் ஆயிரம் அக்கினி தீபங்கள் ஏற்று